தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.53/மா/2022**

**நாள். 09.06.2022**

செல்வி M.காளியம்மாள்,
திண்டுக்கல் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி, திண்டுக்கல் – எதிர் மனுதாரர்

திண்டுக்கல், செல்லாண்டியம்மன் கோவில் வடக்கு தெருவில் வசிக்கும் செல்வி. M. காளியம்மாள் என்பவரின் 16.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.05.2022 அன்று பெறப்பட்டு 53/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல், செல்லாண்டியம்மன் கோவில் வடக்கு தெருவில் வசிக்கும் செல்வி. M. காளியம்மாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 16.05.2022 நாளிட்ட தனது மனுவில், கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

“ எனது தந்தை மாரியப்பன் திண்டுக்கல் நகராட்சியில் பணிபுரிந்து வந்த நிலையில் காலமானார். அதனால் முதல் மனைவி மகள் இருக்கும் நிலையில் இரண்டாம் மனைவி மூக்கம்மாள் என்பவருக்கு கருணைப்பணி, ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. என் தந்தை இறந்து 07.12.2003 முதல் 13.05.2022 வரை எனக்கு மணமாகவில்லை. என் தந்தை மாரியப்பன் அவர்களை சார்ந்து வாழ்ந்து வந்த எனக்கு மணமாகாத பெண்களுக்கு வழங்கப்படும் குடும்ப

ஓய்வூதியம் அரசு ஆணை 325ன்படி எனக்கு வழங்க செய்ய வேண்டும். திண்டுக்கல் மாநகராட்சியும் உள்ளாட்சி நிதி தணிக்கையும் பொறுப்பை தட்டிக்கழிக்கிறார்கள். என் தந்தை மரணமுற்றபின் உள்ளாட்சி நிதி தணிக்கையில் வழங்கப்படும் பணப்பயன்கள் என் பெயருக்கு அனுப்பப்பட்டு சரிசமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி கருணைப்பணியை இரண்டாம் மனைவிக்கும் குடும்ப ஓய்வூதியத்தை மணமாகாத மகளான எனக்கும் வழங்க செய்து இருக்க வேண்டும். ஆனால் உள்ளாட்சி நிதி தணிக்கை மௌனிக்கிறது. திண்டுக்கல் மாநகராட்சி என் துயரை காது கொடுத்து கேட்க மறுக்கிறது. அதனால் அரசாணை எண்.325ன்படி மணமாகாத மகளுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தை வாழ்நாள் முழுவதும் பெற உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் திண்டுக்கல் மாநகராட்சியை நடவடிக்கை எடுக்க செய்ய வேண்டும். அரசு உத்திரவை அமல்படுத்தி எனக்கு உரிய நியாயமான உரிமை பெற ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவத்தின் 18.05.2022 நாளிட்ட அறிவிப்பு (Notice) மூலம் கோரப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரையும் 23.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 18.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

4) மனுதாரர் 23.05.2022 அன்றைய நேரடி விசாரயையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" எனது தந்தை மாரியப்பன் திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்து 2003ம் ஆண்டு பணியிடையே காலமானார். அதனால் எனது தந்தையின் இரண்டாம் மனைவியான மூக்கம்மாள் என்பவருக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மூக்கம்மாள் என்பவர் தற்போது கருணை அடிப்படையில் வேலையும் பார்த்து வருகிறார். எனவே, அவர் பெறும் ஓய்வூதியத்தை வறுமை நிலையில் வாழும் எனக்கு அளித்திட தேவையான நடவடிக்கை எடுத்திடும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என்றும் மேலும் 16.05.2022 நாளிட்ட எனது மனுவினையே எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேடடுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) திண்டுக்கல் மாநகராட்சியைச் சேர்ந்த உதவியாளர் 23.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" திண்டுக்கல் மாநகராட்சியில் மாரியப்பன் என்பவர் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி, 2003ம் ஆண்டு பணியிடையே காலமானார். உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.18610/MPVI/05 நாள்.26.05.2005ன்படி அவரது இரண்டாம் மனைவியான மூக்கம்மாள் என்பவருக்கு இறப்புப் பணிக்கொடை வழங்கப்பட்டு, ஓய்வூதியம் பெற அனுமதியும் வழங்கப்பட்டது. மனுதாரர் மாநகராட்சியில் 19.04.2022 அன்று அளித்துள்ள மனுவில்,

மேற்கண்ட ஓய்வூதியத்தை தனக்கு வழங்கக்கோரி மனு அளித்திருந்தார். அம்மனு உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரகத்திற்கு 02.05.2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது என்றும், அதற்கான பதில் ஏதும் மாநகராட்சியால் இன்னும் பெறப்படவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மூக்கம்மாள் என்பவர் கருணை அடிப்படையில் தற்போது பணியாற்றி வருகிறாரா என்பது குறித்தும், மேலும் அவர் தற்போது ஓய்வூதியம் பெற்று வருகிறாரா என்பது குறித்தும் ஆய்வு செய்து அது தொடர்பான அறிக்கையை இம்முறைமன்றத்தில் இன்னும் ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

அதன்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 30.05.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" திருமதி. மூக்கம்மாள்/மாரியப்பன், திண்டுக்கல் மாநகராட்சியில் பிரிவு–5ல் நாளது தேதியில் துப்புரவுப்பணியாளராகப் பணிபுரிந்து வருகிறார். அன்னாரின் பணிப்பதிவேட்டின்படி காரைக்குடி நகராட்சியில் 01.12.2008–ல் பணியமர்த்தப்பட்டு பின், 26.07.2010 முதல் பணி மாறுதலாகி திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார். இவர் எதிர்வரும் 30.06.2023 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற உள்ளார் என்கிற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

மேலும் திருமதி. மூக்கம்மாள் க/பெ. மாரியப்பன் என்பவர் தொடர்பாக கீழ்க்கண்ட விவரங்களும் சமர்ப்பிக்கப்படுகின்றன என தெரிவித்துள்ளார்.

i) திரு.மாரியப்பன், துப்புரவுப் பணியாளரின் முதல் மனைவி இறந்த பின் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால், இரண்டாவது மனைவி திருமதி.மூக்கம்மாள் என்பவருக்கு ஓய்வூதிய விதிகளின்படி குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டது.

ii) திருமதி.மூக்கம்மாள், 01.12.2008 அன்று பணியமர்த்தப்பட்டுள்ளதால், புதிய பங்களிப்பு திட்டத்தின் கீழ் பெறக்கூடிய பணப்பயன்கள் மட்டுமே இவருக்கு பொருந்தும்.

iii) நாளது தேதி வரை குடும்ப ஓய்வூதியம் திருமதி.மூக்கம்மாள்/மாரியப்பன் என்பவருக்கு அனுமதிக்கப்படும் விவரம், ஓய்வூதியம் பெறப்பட்டு வருகிறது என்ற தகவல் மேற்படியாரிடம் பெறப்பட்டது.

iv) ஓய்வு பெற்ற பணியாளர்கள், அவரின் வாழ்க்கைத் துணை ஆகிய இருவரும் காலஞ்சென்றால் மட்டுமே அவரின் திருமணமாகாத வாரிசுகளுக்கு வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியம் அனுமதிக்கும் அலுவலகமான சென்னை, உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்ககத்தில் பரிசீலிக்க இயலும் என்கிற தகவல் பெறப்பட்டது.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி அவர்களின் அறிக்கை, திண்டுக்கல் மாநகராட்சி உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது தந்தையின் இரண்டாம் மனைவியான மூக்கம்மாள் கருணை அடிப்படையில் வேலை பார்த்து வருவதால் அவர் பெறும் ஒய்வதியத்தை வறுமை நிலையில் வாழும் தனக்கு அளித்திட தேவையான நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் தனது தந்தையின் இறப்பிற்கு பின்பு, தனது தந்தையின் இரண்டாம் மனைவியான மூக்கம்மாள் கருணை அடிப்படையில் வேலையும், பணப்பலன்களையும், ஓய்வூதியம் அனைத்தையும் அவரே பெற்றுள்ளார் என்பதையும், மனுதாரர் வறுமையில் இருப்பதையும், அவரது தந்தையின் இரண்டாம் மனைவியின் பராமரிப்பில் மனுதாரர் இல்லை என்பதையும் விசாரணையில் அறிய முடிகிறது.

- மனுதாரர் குறிப்பிடும் திருமதி. மூக்கம்மாள் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வருகிறார். இவர் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.
- திரு. மாரியப்பன் இரண்டாவது மனைவி திருமதி. மூக்கம்மாளுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டது எனவும் திருமதி. மூக்கம்மாள் 1.12.2008 அன்று பணியமர்த்தப்பட்டுள்ளதால் புதிய பங்களிப்பு திட்டத்தின் கீழ் பெறக்கூடிய பணப்பயன்கள் மட்டுமே திருமதி. மூக்கம்மாளுக்கு பொருந்தும் என திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.
- ஓய்வு பெற்ற பணியாளார்கள் அவரின் வாழ்க்கைத் துணை ஆகிய இருவரும் காலஞ்சென்றால் மட்டுமே அவரின் திருமணமாகாத வாரிசுகளுக்கு வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம் செல்வி.M.காளியம்மாள் அவர்களுக்கு அதாவது திரு மாரியப்பனின் வாரிசுக்கு, ஓய்வூதிய விதிகளின்படி பரிசீலிக்கப்படும் என திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகின்றது.

இருப்பினும் மனுதாரர் செல்வி.M.காளியம்மாள் தனது தந்தையின் இரண்டாம் மனைவியான மூக்கம்மாள் என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலையும் ஓய்வூதியம் அளிக்கப்பட்டு வருவதால் தான் வறுமை நிலையில் வாழ்வதாக தெரிவித்து திருமதி. மூக்கம்மாள் பெறும் ஓய்வூதியத்தை தனக்கு அளித்திட தேவையான நடவடிக்கை எடுத்திடும்படி இம்முறைமன்றத்தை கோரியுள்ளார். எனவே நிதி (ஓய்வூதியம்) துறை அரசாணை எண். 325, நாள் 28.11.2011ன்படி திருமணமாகாத மகளுக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான ஆணையின்படியும், சட்டப்படியும் செல்வி. காளியம்மாளுக்கு குடும்ப ஓய்வூதியம் பெற்றுத்தர தேவையான உரிய நடவடிக்கை எடுத்திட திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் இது குறித்து உள்ளாட்சி தணிக்கைத் துறைக்கு தகுந்த முன்மொழிவுகள் அனுப்பி விதிகள் அனுமதிக்கும்பட்சத்தில்

மனிதாபிமான முறையில் இம்மனுவினை பரிசீலித்து உரிய ஆணைகள் வழங்க ஆணையிடப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) செல்வி. M.காளியம்மாள்,
த/பெ. மாரியப்பன்,
செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத்தெரு,
திண்டுக்கல் – 624 001.
2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.
3) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்